**அநுராதபுரம் மாநகர சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி மாநகர முதல்வரிற்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டுடன் தொடர்பான வரி மற்றும் மிகைக் கட்டணம் ரூபா. 71,266,393 ஆக இருந்த போதும் வருமானச் செலவுக் கணக்கில் அது ரூபா. 65,008,065 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா. 6,258,328 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் வட மத்திய உள்ளூராட்சி சபையினால் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 9,870,000 பெறுமதியான கழிவு எரிக்கும் இயந்திரம் மற்றும் கொம்போஸ்ட் உரம் தயாரிக்கும் இயந்திரத்தின் பெறுமதி கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஐந்தொகைக் குறிப்புகளுக்கமைவாக மோட்டார் வாகன மற்றும் இழுவை வண்டி பெறுமதி ரூபா. 99,462,571 ஆகவிருந்த போதும் மதிப்பீட்டறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா. 89,555,872 ஆக இருந்ததுடன் அம் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 வீட்டுக்கு வீடு கிராமத்திற்குக் கிராமம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிழக்கு நுவரகம் பலாத பிரதேச செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 4,477,042 செலவில் அநுராதபுரம் மாநகர சபை வாராந்த சந்தையின் நிர்மாணப் பணிகள் மற்றும் புனர் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2017 ஜனவரி மாதத்தில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் இந்நிர்மாணப் பணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனக் கணக்கிற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்குகள் அத்தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை வட கிழக்கு உள்ளூராட்சி சேவைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூலம் ரூபா. 46,888,185 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த அநுராதபுரம் மாநகர சபைக்குச் சொந்தமான 02 அபிவிருத்தித் திட்டங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனக் கணக்கிற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்குகள் அத்தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்கான நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) உரிமை உறுதிப்படுத்தப்படாத, சபையினால் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 10 காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல் தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை பரிசீலனை செய்கையில் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஜுன் மாதம் வரை ரூபா. 39,541,400 சம்பள மோசடியொன்று இடம்பெற்றிருப்பது அவதானிக்கப்பட்டது. இம்மோசடியின் சரியான தொகையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேலதிகமாகத் தேவைப்படுகின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான குறித்த தனியார் வங்கியூடாக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவு விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் குறித்த மோசடியினால் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை தீர்மானிக்க முடியாதிருந்தது.

(ஆ) பெற வேண்டிய வீட்டு வாடகை ரூபா. 2,168,708 இற்காக பெற வேண்டிய வீட்டு வாடகை பதிவேடு மீளச் செலுத்தும் வைப்புக்கள் ரூபா. 101,625,234 இற்கான நாளதுவரையாக்கப்பட்ட வைப்பு ஆவணம் மற்றும் நன்கொடை ரூபா. 35,585,046 இற்கான நன்கொடை ஆவணம் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

1.3.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 396 | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சிய போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப் படாத ரூபா 13,096 கூட்டுத்தொகையான 9 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 571(1) | காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பாக அட்டவணையொன்று ஒவ்வொரு அரையாண்டிலும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,677,445 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,128,550 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) வைப்புச் செய்யப்பட்டு 04 மாதங்கள் கடந்த எனினும் கணக்கிற்கு செலவு வைக்கப்படாத ரூபா 87,250 பெறுமதியான காசோலைகள் தொடர்பாகநி.பி 187 மற்றும் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 000147847 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய மீளாய்வாண்டின் இறுதி வரை காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 179,533 தொகையான 05 மதிப்பிழந்த காசோலைகளுக்காக நி.பி 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 84,012,328 | 65,001,600 | 66,479,382 | 82,534,546 |
| முத்திரைக் கட்டணங்கள் | 30,000,000 | 30,000,000 | - | 60,000,000 |
| வியாபார அனுமதிப் பத்திரங்கள் | 2,676,798 | 14,967,545 | 15,417,177 | 2,227,166 |
| வீட்டு வாடகை | 1,687,008 | 715,447 | 233,747 | 2,168,708 |
| கட வாடகை | 28,036,251 | 17,245,772 | 7,674,952 | 37,607,071 |
| பொது வியாபார நிறவன வாடகை | 3,904,568 | 5,666,445 | 6,477,414 | 3,093,599 |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 2,350,620 | 429,416 | - | 2,780,036 |
| மொத்தம் | 152,667,573 | 134,026,225 | 96,282,672 | 190,411,126 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 152,667,573 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்நிலுவை வருமானம் அறவிடப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் வருமான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீட்டு வாடகை மற்றும் ரூபா 1,687,008 மற்றும் ரூபா 30,000,000 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப்பெறுமதி ரூபா 2,168,708 மற்றும் ரூபா 60,000,000 வரை அதிகரித்திருந்தது.

**2.3.2 ஆதன வரி**

---------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 82,534,546 நிலுவை வீதவரியை மாநகர கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 252 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நிலுவை கடைவாடகை**

----------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 633 கடைகளிலிருந்து நிலுவை வாடகை ரூபா 40,700,670 தொகையை மாநகர கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 253 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

---------------------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 159 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 2,227,166 ஆன நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களை மாநகர கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 254(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 செயலாற்றல்**

-----------------------

(அ) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறுள்ளன.

**(அ) உப விதிகள்**

--------------------------

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் ஆவது பிரிவின் கீழ் 32 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களின் (நிறைவேற்றப்பட்ட விதிகள்) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி மன்ற, வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் தயாரிக்கப்பட்ட 1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உள்ளூராட்சிமன்ற நிறுவனங்கள் நிறைவேற்றிய உப விதிகள் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தது. அந்த இலக்குகுள் ஆண்டில் முறையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 272 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றப்பட்ட இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமையால் பின்வரும் விடயங்களை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(i) 2017 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பிற்கமைய அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் தற்போதுள்ள பணிக்குழுவின் இயலுமைகள் மற்றும் பதவியணியின் செயற்திறன் காட்டி அடிப்படையிலான செயன் முன்னேற்றம்.

(ii) ஆண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அச்செயற்பாடுகளை முடிப்பதற்கான கால வரையறை மற்றும் அதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள்/பலன்கள் அடையப்பெற்றுள்ளனவா என்பது.

(iii) பிரதான கொள்வனவுகள் அடங்கிய கொள்வனவுத் திட்டமொன்று காணப்படாமையினால் சகல கொள்வனவு நடவடிக்கைகளும் கொள்வனவு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மாநகர சபைக்கு உச்ச பங்களிப்பினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளனவா என்பது.

(iv) அரசின் அல்லது மாகாண சபையின் பங்களிப்பில் மேற்கொள்ளப்படும் செலவுகளுக்கு தேவையான பணம் முறையாக விண்ணப்பிக்கப்பட்டுப் பெறப்பட்டுள்ளதா என்பது.

(v) ஒவ்வொரு வருமானத் தலைப்பின் கீழும் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நாளதுவரையாக்கப்பட்ட சிட்டைகள் பெறப்பட்டு குறித்த காலத்தில் அறவிடப்பட்டுள்ளனவா என்பது மற்றும் அறவிடப்படாத வருமானங்களை அறவிடுவதற்கு மாநகர சபைச் சட்டத்தின் குறித்த பிரிவுகளுக்கமைவாக நகர ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பது.

(vi) மீளாய்வாண்டினுள் உள்ளக கணக்காய்வொன்றினை போதியளவு மேற்கொண்டு நிறுவனத்தின் உள்ளக நிருவாகம் எவ்வளவு தூரம் சீர்செய்யப்பட்டுள்ளது என்பது.

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்.**

மீளாய்வாண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் ரூபா. 5,040,000 பெறுமதியான கழிவுப்பொருள் எரிக்கும் இயந்திரமொன்றும் ரூபா. 4,830,000 பெறுமதியான கொம்போஸ்ட் உரம் தயாரிக்கும் இயந்திரமொன்றும் வழங்கப்பட்டிருந்தது. நாளாந்தம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் சேகரிக்கப்படும் சிதைவடையக்கூடிய கழிவுகள் 18 தொன் கொம்போஸ்ட் தயாரிப்பதற்கும் 23 தொன் சிதைவடையாத கழிவுகளை எரிப்பதற்கு குறித்த இயந்திரங்களின் கொள்ளளவு போதாமல் இருந்த போதும் அவ்வியந்திரங்களில் காணப்படும் இயலளவில் உச்ச பயன் பெறப்பட்டிருந்தமையையும் அவதானிக்க முடியவில்லை.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) அநுராதபுரம் மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் தினமும் ஒன்றுசேர்கின்ற சுமார் 41 டொன் கழிவில் 75 வீதமான உக்காத கழிவுகள் திரிக்குளம் எனும் இடத்தில் புதைத்தல் அல்லது மண்ணினால் மூடிவிடுதல் காரணமாக எதிர்காலத்தில் சூழல் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

(ii) அநுராதபுரம் மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்ற கூம்பிச்சன்குளம் குளச் சுற்றுச்சூழல், வன்னியன்குளம் குளச் சுற்றுச்சூழல், பொன்னாரன்குளம் குளச் சுற்றுச்சூழல் என்பவற்றில் அமைந்துள்ள சட்ட விரோத நிர்மாணங்கள் தொடர்பாக தகவல்கள் மற்றும் அறிக்கைகளை சேகரித்து ஆவணப்படுத்தி அந்நிர்மாணங்களை

அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நகரத்தின் தேவைக்காக குடிநீரை வழங்குகின்ற நுவர வாவி மற்றும் திஸா வாவி ஆகியவற்றின் குளக்கட்டினை அண்டிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்ட விரோத நிர்மாணிப்புகள் முறையே 275 மற்றும் 130 அவதானிக்கப்பட்டதுடன் இந்நிர்மாணிப்புகளினால் குளத்து நீர் மாசடைவதன் காரணமாக நகர அதிகாரப் பிரதேசத்தில் மக்களின் சுகாதாரத்திற்கு பங்கம் ஏற்பட்டிருந்தது. எனினும் அச் சட்டவிரோத நிர்மாணிப்புகளை அகற்றுவதற்காக நகர சபையினால் முறையான திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அநுராதபுரம் மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள உணவு விற்பனை நிலையங்கள் பலவற்றில் பாவனைக்கு பொருத்தமற்ற அல்லது காலாவதியான உணவுகள் விற்கப்படுவதனால் அவ்வுணவகங்களின் சுத்தம் தொடர்பாக 1991 இன் 20 ஆம் இலக்க உணவுகள் (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1980 இன் 26 ஆம் இலக்க உணவுகள் சட்டத்தின் பிரமாணங்களுக்கமைய அவ்வுணவகங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக மாநகர சபை அறிந்து இருக்கவில்லை. ஆதலால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு தேவையான நடைமுறையொன்றை மீளாய்வாண்டில் எடுத்திருக்கவில்லை.

**(எ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மாநகர சபையில் 2017 ஆம் வருடத்திற்கான ரூபா. 407,163,600 மீண்டெழும் செலவினமும் ரூபா. 75,018,650 மூலதனச் செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் மாநகர சபையின் பணிக்கூற்றிற்கமைவாக நகர எல்லையினுள் வசிக்கின்ற நகரவாசிகளை அடிப்படையாகக் கொண்டு மற்றும் நகரத்தில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வருபவர்களின் நலனுக்காக தற்பொழுது மாநகர சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற அனைத்து வளங்களையும் உபயோகித்து மக்கள் நேயம் கொண்ட, சூழல் நேயம் கொண்ட சட்டரீதியான நிலைபேற்றினைக் கொண்ட முன்மொழிவுத் தொகுதியொன்றினை நகரத்தினுள் ஏற்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் உயர் தரத்தில் கொண்டு நடத்தல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா. 3,640,099 செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தில் 2016 மே 30 ஆம் திகதியன்று ரூபா. 2,905,849 செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா. 734,250 செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிழக்கு நுவரகம்பலாத பிரதேச செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 4,777,042 செலவில் நிர்மாணிக்கப்பட்ட அநுராதபுரம் மாநகர சபை வாராந்த சந்தை நிர்மாண மற்றும் புனர் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 2016 ஜனவரி மாதத்தில் மாநகர சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஜுன் 30 ஆம் திகதி அளவில் வாராந்த சந்தையின் நிர்மாணிப்புகள் பொதுமக்களின் பாவனைக்கு பயன்படுத்தப்படாது முற்றாக உடைத்து அகற்றப்பட்டிருந்தது.

(இ) வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்து ஆவணம் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மை**

(அ) பேர்ச் ஒன்று ரூபா மில்லியன் சந்தை பெறுமதியான மாநகர சபைக்குரிய 43.54 பேர்ச் அளவிலான 04 காணித் துண்டுகளில் அமைந்துள்ள 04 வீடுகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முறையான

அங்கீகாரமின்றி அவற்றை குடியிருப்பவர்களுக்கு உரித்தளித்து கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்திற்கொண்டு புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததனால் மாநகர சபைக்கு பாரிய வரி வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு மதிப்பீட்டு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் 07 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 14 சதவீதம் வரையான விலகலொன்றும் 05 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 51 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 தீர்வு செய்யப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு விசாரணைகள்**

21 கணக்காய்வு விசாரணைகளுக்காக 2018 மே 30 ஆம் திகதி வரை பதில் சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் அதன் மீது கணக்கிட கூடியதாக இருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 87,553,452 ஆக இருந்தது.

**5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | இனங்காணப்பட்ட குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | (i) நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நாளாந்த மேற்பார்வையொன்று இடம்பெறாமை |
| | (ii) நிதி நடவடிக்கைகளுடன் தொடர்பாக உத்தியோகத்தர்கள் பிணை பெற்றுக் கொள்ளப்படாமை |
| | (iii) தீர்வையாகாத வருமானம் மற்றும் மதிப்பிழந்த காசோலைகள் தீர்வு செய்யப்படாமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | உள்ளகக் கட்டுப்பாடு | (i) பதவிகளுக்குரியதல்லாத கடமைகளை கையளித்தல் |
| | | (ii) பதவியணியினர் கடமைகளை மேற்பார்வை செய்யாமை |
| | | (iii) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்தாமை. |
| | | (iv) உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) சொத்துக்கள் பதிவேடு முறையாக நாளதுவரையாக பேணப்படாமை. |
| | | (ii) நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை |
| | | (iii) உரிய காலத்தில் பொருள் மெய்மையாய்வு மேற்காள்ளப்பட்டு அறிக்கையிடப்படாமை. |
| (ஈ) | பாதீடு | பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தாமை |
| (உ) | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஊ) | வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | | (ii) வருமானப் பதிவேடுகள் நாளதுவரை யாக்கப்படாமை |
| (எ) | வருடாந்த திட்டம் | செயல்நடவடிக்கை மற்றும் பெறுகை திட்டம் தயாரிக்கப்படாமை. |